# மருத்துவ ஆய்வுக்கு நீங்கள் ஒரு பங்களிப்பை வழங்குங்கள்

அன்பான பெண் நோயாளிகளே, அன்பான ஆண் நோயாளர்களே

Insel Gruppe ன் வைத்தியர்களும் விஞ்ஞானிகளும் பல வருடங்களாக மருத்துவத்துறையின் முன்னேற்றத்திற்காக தமது பங்களிப்பை மருத்துவ ஆய்வுகளில் வழங்கிவருவதன் பலனாக மக்களின் உடல்நலம் பேணப்படுகின்றது. கடந்த வருடங்களில் இதன்மூலம் நோய்களில் முற்பாதுகாப்பு, கண்டறிதல் மற்றும் சிகிச்சைகளில் பெருமளவு முன்னேற்றம் காண முடிந்துள்ளது.

ஆய்வுகளில் பெருமளவு முன்னேற்றம் ஏற்பட்டிருப்பினும், இன்னும் அதிகமான பகுதிகளில், சம்பந்தப்பட்ட நோயாளரின் நன்மை கருதி நோய்க்கான காரணங்கள், கண்டறிதல் மற்றும் சிகிச்சை போன்றவற்றில் இன்னும் முன்னேற்றம் காண முடியும். இப்பகுதிக்கான ஆய்வுத்திட்டங்களுக்கு, அதிகளவிலான நோயாளர்கள் உடல்நலம் குறித்த தகவல்களை அல்லது உயிரியல் பொருட்களை வழங்க முன்வந்தால் மட்டுமே இது சாத்தியமாகும்.

கண்டறிதல்- அல்லது சிகிச்சைத் தேவைக்காக ஆண் பெண் நோயாளர்களிடமிருந்து அடிக்கடி திரவங்கள் (உதாரணமாக இரத்தம், சிறுநீர், Liquor அல்லது வேறு உடல்நீர்கள்) அல்லது உடல் உள்ளுறுப்பு மாதிரிகள் எடுக்கப்படுவதுடன் பரிசோதனை செய்யப்படுகின்றன. இந்தத் திரவங்கள் மற்றும் உடல்உள்ளுறுப்பு மாதிரிகள் உயிரியல் பொருட்கள் என அழைக்கப்படுகின்றன. அதிக வேளைகளில் இதன்போது எடுக்கப்பட்ட முழு உயிரியல் பொருட்களும் கண்டறிதலுக்காக அல்லது சிகிச்சைத் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுவதில்லை. இவ்வாறாக மிகுதியாக இருக்கும் பொருட்கள் அத்துடன் உடல்நலம் குறித்த நபர்களைப் பற்றிய தரவுகள் (உ-ம் வயது, பால், மரபு குறித்த தரவுகள், இரத்தத்தின் நிலை, உடல்நல நிலை, நோய்கள், சிகிச்சைகள் போன்றவை) மருத்துவ ஆய்வுகளுக்கு மிகவும் பெறுமதியானவை.

ஆகவே உங்கள் சம்மதத்தை வழங்குவதன் மூலம், மருத்துவ ஆய்வுகள் மேலும் விருத்தியடைய உதவுமாறு நாங்கள் தயவாகக் கேட்டுக்கொள்கின்றோம். உங்களுக்குச் சொந்தமான உயிரியல் பொருட்கள் மற்றும் உங்கள் உடல்நலம் குறித்த தரவுகளை Insel Gruppe மருத்துவ ஆய்வுக்காகப் பயன்படுத்த தயவுசெய்து நீங்கள் அனுமதியுங்கள்.

இதன்மூலம் எமக்கும் புதிய ஆய்வுத் திட்டங்களுக்குப் போதுமான அளவு மூலப்பொருட்கள் ஆய்வுகளுக்காக இருப்பதுடன் தராதரமான பெறுமதிமிக்க கற்கைநெறிகளை மேற்கொள்ள முடியும் என்பதற்காக மேலும் உங்கள் சம்மதத்தை வழங்குமாறு தயவாகக் கேட்டுக்கொள்ள விரும்புவதுடன், உங்களிடமிருந்து மேலதிகமாக ஒருமுறை இரத்தம் எடுக்க அனுமதிக்க அனுமதிக்குமாறும் வேண்டுகிறோம்.

இக் கைநூலில் பல முக்கிய தகவல்கள் ஒன்றாக அடங்கியுள்ளது, இதன்மூலம் நீங்கள் உங்கள் முடிவை எடுத்துக்கொள்ளலாம்.

**உங்கள் சம்மதம் சொந்தவிருப்பிலானது. நீங்கள் இதை எந்த வேளையிலும் விலக்கிக் கொள்ளலாம். உங்கள் முடிவு உங்கள் மருத்துவ சிகிச்சையை எவ்விதத்திலும் பாதிக்காது. நீங்கள் உங்கள் முடிவை எடுப்பதற்கு தேவையான அளவு நேரத்தை எடுத்துக் கொள்ளுங்கள்.**

INSELGRUPPE

## பகுதி A:
## உயிரியல் பொருட்கள் மற்றும் உடல்நலம் குறித்துப் பெற்ற தரவுகளை மருத்துவ ஆய்வுக்காக பாவிப்பது குறித்த விளக்கங்கள்

### உங்கள் சம்மதத்தின் அர்த்தம் என்ன?

நீங்கள் சம்மதிப்பீர்களானால், உங்கள் உயிரியல் பொருட்கள், உங்கள் மரபு மற்றும் உடல்நலம் குறித்துப் பெறப்பட்ட தரவுகள் மருத்துவ ஆய்வுக்காகப் பார்வையிட அனுமதிக்கப்படும். இதன் அர்த்தம் என்னவென்றால், உங்களது உயிரியல் பொருட்கள் மற்றும் உங்களைப்பற்றிய தரவுகள் ஒரு குறிப்பிட்ட நிபந்தனையுடன் Insel Gruppe ன் ஆய்வாளர்களுக்கு அல்லது வேறு ஆய்வுத்திட்ட நிறுவனங்களுக்கு வழங்கப்பட அனுமதிப்பதாகும். உங்கள் சம்மதம் அனைத்து எதிர்காலத் திட்டங்களுக்கும் செல்லுபடியாகும். ஆகவே உங்களது உயிரியல் பொருட்கள் மற்றும்/அல்லது உங்களைப்பற்றிய தரவுகள் ஆய்வுத் திட்டங்களுக்குப் பாவிக்கப்படும்போது உங்களுக்கு அறிவிக்கப்படமாட்டாது.

### உடல்நலம் குறித்துப் பெறப்பட்ட தரவுகளில் எவை அடங்கியுள்ளது?

உடல்நலம் குறித்துப் பெறப்பட்ட தரவுகள் எனும்போது நோயாளர் கோவையிலுள்ள அனைத்துத் தரவுகளும், உ-ம். உங்கள் நோய் குறித்த விளக்கத்தின்போது கண்டறிந்த ஏற்படக்கூடிய ஆபத்துக் காரணிகள், சிகிச்சைப் பெறுபேறுகள், படங்கள் மூலமான அல்லது இரசாயனப் பகுப்பாய்வுப் பரிசோதனைகள் மற்றும் மரபுப் பரிசோதனைகள் போன்றவைகளாகும். இதன்போது நோய்க்காலத்தின்போதான தரவுகளும் மற்றும் வழங்கப்பட்ட சிகிச்சையின்போதான எதிர்விளைவுகளும் விளக்கப்பட்டிருக்கும்.

### எவ்வாறு உங்கள் உயிரியல் பொருட்கள் மற்றும் உடல்நலம் குறித்துப் பெற்ற தரவுகள் பாதுகாக்கப்படுகின்றன?

Insel Gruppe சட்டரீதியான விதிமுறைகளைக் கடைப்பிடிப்பதை உயர் பெறுமானமாகக் கொண்டுள்ளது. உங்கள் உயிரியல் பொருட்கள் மற்றும் தரவுகள் அதற்குத் தகுந்தாற்போல் பாதுகாப்பாக வைக்கப்படும். உங்கள் உயிரியல் பொருட்கள் மற்றும் உடல்நலம் குறித்துப் பெறப்பட்ட தரவுகளைப் பார்வையிடுவது தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. இந்நிலையத்தின் தெரிவுசெய்யப்பட்ட ஒருசில குறிப்பிட்ட நபர்களே பாதுகாத்துப் பூட்டப்படாமலுள்ள நபர்களது தரவுகளை மற்றும் இரகசிக் குறியீடுகளைக் கையாள்வர். மற்றும்படி உடல்நலம் குறித்துப் பெறப்பட்ட தரவுகள் மற்றும் உயிரியல் பொருட்கள் ஆய்வாளர்களுக்கு பூட்டப்பட்டபடியோ அல்லது அடையாளம் தெரியாதபடியோ பெறக்கூடியதாக இருக்கும்.

### பூட்டப்பட்டது அல்லது அடையாளம் தெரியாதது என்றால் என்ன?




**பூட்டப்பட்டது** என்றால், உங்களை அடையாளப்படுத்தக்கூடிய அனைத்துத் தரவுகளும் (உ-ம். பெயர், பிறந்த திகதி போன்றவை), ஒரு இரகசிக் குறியீடு மூலம் (திறப்பு) மாற்றப்பட்டிருக்கும், எந்த நபராவது இந்த குறியீட்டைத் தெரிந்திருக்காவிடின் உங்கள் தரவுகள் குறித்து எதனையும் பின்னோக்கித் தெரிந்து கொள்ள முடியாது. இந்தக் குறியீடு எப்பொழுதும் Insel Gruppe யிலேயே இருக்கும்.

**அடையாளம் தெரியாதது** என்றால், உங்களை அடையாளப்படுத்தும் அனைத்துத் தரவுகளும் மீளவும் பெறமுடியாதபடி அழிக்கப்பட்டிருக்கும். பின்னோக்கிச் சென்று இவற்றை எவ்விதத்திலும் தெரிந்து கொள்ள முடியாது.

### உயிரியல் பொருட்கள் மற்றும் உடல்நலம் குறித்துப் பெற்ற தகவல்களைப் பொறுத்தவரை உள்- மற்றும் வெளிநாடுகளில் உள்ள வேறு ஆய்வு நிறுவனங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற கட்டுப்பாடு உள்ளதா?

ஆம், இந்தக் கட்டுப்பாடு மிகவும் தெளிவானது இது சுவிஸ் சட்டத்தால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. அதாவது இவ்வாறான ஆய்வு செய்யும் இடம் ஆகக் குறைந்தது சுவிசில் உள்ளது போன்று தரவுகள் பாதுகாக்கப்படும் முறையை உறுதிப்படுத்துவதாக இருத்தல் வேண்டும்.

## சம்மதத்தை வழங்குவது அனைத்து பதிவுகளையும் மருத்துவப் பதிவு இடாப்பில் பதிவதற்கும் செல்லுபடியாகுமா?

மருத்துவப் பதிவு இடாப்பு என்பது விசேட உடல்நல விடயங்கள் அடங்கிய உடல்நலம் குறித்த தரவுகளை ஒழுங்குமுறைப்படி சேகரிப்பதாகும். இது மருத்துவத் துறையின் தராதரத்தைப் பாதுகாப்பதற்கு, ஆய்வுகளுக்கு அல்லது பரிணாமம் போன்றவைகளுக்கு உதவுகின்றது. இவ்வாறான பதிவுகள் உங்கள் சம்மதத்துடன் இந்த இடாப்புகளில் பதிவு செய்யப்படலாம். இதற்கான முன்நிபந்தனை, இந்த பதிவு இடாப்பு சொந்தமாக சட்டரீதியான நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதாக இருக்க வேண்டும். இந்த மருத்துவ இடாப்பில் பதிவதற்கான சம்மதம் நிச்சயமாக ஆய்வு நோக்கங்கள் மற்றும் தராதரத்தைப் பாதுகாப்பதற்காகவே பாவிக்கப்பட வேண்டும். இடாப்பில் பதியப்படுபவை, வேறொரு தேவைக்குப் பயன்படுத்தப்பட்டாலோ அல்லது மேலதிக தரவுகள் பெறப்படுமானால், மேலதிகமாக ஒரு சம்மதத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருக்கும்.

## ஆய்வின் முடிவுகளுக்கு என்ன நேரிடும்?

உங்களுக்கு அடிப்படை ரீதியாக தகவல்களை அறிவதற்கு உரிமையுள்ளது. உயிரியல் பொருட்கள் மற்றும் உடல்நலம் குறித்துப் பெறப்பட்ட தரவுகள் கற்கைநெறியை மேற்கொள்வதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது, இதன்போது ஒரு தனிப்பட்ட நபரின் முடிவுகள் நெருக்கமாக ஆராயப்படுவதில்லை. இந்த முடிவுகள் எதிர்கால நோயாளிகளின் சிகிச்சையை மேன்மைப்படுத்த பங்களிக்கும். ஆகவே உங்கள் பொருட்கள் அல்லது உங்கள் தரவுகள் எவ்வாறு பாவிக்கப்பட்டது மற்றும் தனிப்பட்ட ஆய்வுத்திட்டங்களின் முடிவுகள் எவ்வாறு அமைந்தது என்பது குறித்து அறியத்தரப்படமாட்டாது.

## ஆய்வின் முடிவுகள் ஒரு உற்பத்தியை மேற்கொள்ளுமாயின் உங்களுக்கு நிதிப் பங்களிப்பு வழங்கப்படுமா?

நிதிப்பங்களிப்பு வழங்கப்படக்கூடாது என சட்டரீதியாக முடிவுசெய்யப்பட்டுள்ளது. ஆய்வுத் திட்டங்களின் முடிவுகள் சிலவேளைகளில் ஒரு வியாபார உற்பத்திக்கு வழிவகுக்கலாம், உதாரணமாக ஒரு மருந்தைக் கண்டுபிடிக்க உதவலாம். இந்த ஆய்வுகளின்போது உயிரியல் பொருட்கள் மற்றும் உடல்நலம் குறித்துப் பெறப்பட்ட தரவுகள் ஒரு சிறிய பங்களிப்பையே வழங்குகின்றது. ஆகவே வியாபார ரீதியாகப் பாவிப்பதற்கோ அல்லது பதிவுசெய்வதற்கோ, உங்கள் உயிரியல் பொருட்கள் மற்றும் உடல்நலம் குறித்துப் பெறப்பட்ட தரவுகள் எவ்வித தொடர்பையும் கோரமுடியாது.
தற்போதுள்ள சட்டம், Insel Gruppe உயிரியல் பொருட்களை இலாபம் பெறுவதற்கு வழங்குவதைத் தடைசெய்கின்றது.

## உங்கள் தரவுகளை பார்வையிட உங்களுக்கு உரிமையுள்ளதா?

நீங்கள் Insel Gruppe ஐ எந்த வேளையிலும், உங்களைப் பற்றிய எம்மிடமுள்ள அனைத்து விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு எழுத்து மூலம் தொடர்புகொள்ளலாம்.

## நீங்கள் உங்கள் சம்மதத்தை விலக்கிக் கொள்ளலாமா?

ஆம், நிச்சயமாக. நீங்கள் இந்த சம்மதத்தை எவ்வேளையிலும் எவ்வித காரணங்களையும் காட்டாமல் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். அந்த நேரத்திலிருந்த உங்கள் உயிரியல் பொருட்கள் மற்றும் உடல்நலம் குறித்துப் பெறப்பட்ட தரவுகள் ஆய்வுக்காக மேலும் பயன்படுத்தப்படமாட்டாது.

தற்சமயம் மீளப்பெறுவதாயின் நீங்கள் அறிவிக்க வேண்டியது:

Insel Gruppe AG
Direktion Lehre und Forschung
Einwilligungserklärung
3010 Bern

E-Mail: einwilligungserklaerung-forschung@insel.ch

### நீங்கள் சம்மதத்தை வெளிப்படுத்துவதில் கையொப்பமிடாவிட்டால், என்ன நடக்கும்?

நீங்கள் சம்மதத்தை தவிர்த்துக்கொண்டால், Insel Gruppe க்கு உரிமையுள்ளது, உங்கள் தரவுகளை தராதரத்தைப் பாதுகாப்பற்கு மற்றும் ஆய்வு நோக்கங்களுக்காக பின்வருமாறு பாவித்துக் கொள்ளும்.

- உங்கள் மரபுத் தரவுகள் மற்றும் உயிரியல் பொருட்களை தொடர்ந்து பாவிப்பது (உ-ம். இரத்தப் பொருட்களின் மிகுதிகள்) அடையாளம் தெரியாத வகையில்.
- உங்கள் மரபு ரீதியாக இல்லாத தரவுகளை பூட்டப்பட்ட வகையில் தொடர்ந்து பாவிப்பது
- உங்கள் அடையாளம் தெரியாத உயிரியல் பொருட்கள் மற்றும் உங்கள் அடையாளம் தெரியாத நபர் பற்றிய மரபுத் தகவல்கள் மற்றும் பூட்டப்பட்ட வகையில் உங்கள் உடல்நலம் குறித்துப் பெறப்பட்ட தரவுகள் ஆய்வுத்தேவைக்காக மூன்றாம் நபருக்கு வழங்கப்படும்.

உங்கள் அடையாளம் தெரியாத உயிரியல் பொருட்கள் அல்லது உங்கள் தரவுகள் ஆய்வுகளுக்குப் பாவிப்தற்கு சம்மதிக்கா விட்டால், நீங்கள் அதற்கு எதிராக எந்த வேளையிலும் ஆட்சேபனையைத் தெரிவிக்கலாம். அப்படியாயின், சிகிச்சையளிக்கும் ஆண் அல்லது பெண் வைத்தியருக்கு இதுகுறித்து அறியத்தருமாறு தயவாக வேண்டுகிறோம். உங்கள் ஆட்சேபனை மீளவும் நீங்கள் எமது வைத்தியசாலையில் பராமரிக்கப்படுவதை எவ்விதத்திலும் பாதிக்காது.

### நீங்கள் மேலும் அறிந்துகொள்ள விரும்புகின்றீர்களா?

தற்சமயம் உங்களுக்கு கேள்விகள் இருப்பின் அல்லது மேலதிக தகவல்கள் தேவைப்படின், உங்கள் ஆண் அல்லது பெண் வைத்தியரை நாடுங்கள் அல்லது கீழே உள்ள முகவரியைத் தொடர்பு கொள்ளுங்கள்.

Insel Gruppe AG
Direktion Lehre und Forschung
Einwilligungserklärung
3010 Bern
E-Mail: einwilligungserklaerung-forschung@insel.ch

## பகுதி B: Liquid BioBank Bern க்கு ஒரு மேலதிகமான இரத்தம் எடுத்தல் குறித்த தகவல்கள்

உறுதியாக எடுக்கக்கூடிய ஆய்வின் முடிவுகளுக்காக, பல்வேறு தரமான பெறுமதி வாய்ந்த மாதிரிகைகளில் ஆய்வாளர்கள் தங்கியுள்ளனர். இக்காரணத்தினால் Insel Gruppe க்கு மிகவும் முக்கியமானது, நோயாளராகிய உங்களிடமிருந்து நோய்களைக் கண்டறிவதற்கு மற்றும் சிகிச்சைக்காக ஏற்கனவே பெறப்பட்ட மாதிரிகைகளுடன் **மேலதிகமாக** ஒருமுறை இரத்த மாதிரியைப் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. இந்த மேலதிக இரத்தம் எடுத்தலுக்கு உங்கள் சம்மதத்தை நீங்கள் பிரத்தியேகமாக வழங்குங்கள்.

### உங்கள் மாதிரிகள் எவ்வாறு பாவிக்கப்படுகின்றன?

உங்கள் மாதிரிகளைப் பாதுகாப்பது மற்றும் வழங்குவதன்போது உடல்நலம் குறித்துப் பெறப்பட்ட தகவல்கள் மற்றும் மருத்துவ மாதிரிகளின் போது மேற்கொள்ளப்பட்ட அதே விதிகளே நடைமுறைப்படுத்தப்படும். விசேடமாக நீங்கள் உங்கள் சம்மத்தை எந்த வேளையிலும் எவ்வித காரணமும் காட்டாமல் விலக்கிக் கொள்ளலாம். மேலதிகமாக மாதிரிகளை நிர்வகிப்பது மற்றும் வழங்குவது மாநிலத்தின் நெறிமுறை அமைப்பு வழங்கிய ஒழுங்குவிதியின்படி அமைந்திருக்கும்.

### ஏன் ஒரு மேலதிக இரத்தம் எடுத்தல் தேவைப்படுகின்றது?

உங்களுக்கான சிகிச்சையின்போது மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளுடன் ஒப்பிடும்போது, ஆய்வுகளுக்கான மாதிரிகளின் தராதரங்களில் வேறு தேவைகள் உள்ளது. இதில் முக்கியமானது என்னவென்றால், ஒரு ஆய்வில் பயன்படுத்தப்படும் அனைத்து மாதிரிகளும் ஒரே விதமாக செயற்படுத்தப்பட வேண்டும் என்பதாகும்.
ஒரு இரத்த மாதிரியைப் பொறுத்தவரை, அதை எடுத்தல், எடுத்துச் செல்லல் மற்றும் அதை பாதுகாத்து வைக்கும் முறைகள் அதன் தராதரத்தை நிர்ணயிக்கும். மேலதிகமாக எடுக்கப்படும் இரத்தம் காரணமாக இந்த நடைமுறை ஒழுங்காக்கப்பட்டு பதிவு மேற்கொள்ளப்படும். இந்த தராதரத்தை நிர்ணயிக்கும் மற்றும் பாதுகாத்துவைக்கும் பொறுப்பை BioBank Bern மேற்கொள்ளும். BioBank Bern இதன்மூலம் பல வித்தியாசமான ஆய்வு நடவடிக்கைகளுக்காக மாதிரிகளை ஒரே விதமாகவும் ஒரேவிதமான தரத்திலும் வழங்கிக் கொள்ள முடியும்.

### ஏன் மேலதிகமான தரவுகள் (உயரம் /நிறை/இனம்) தேவைப்படுகின்றன?

உங்கள் இரத்த மாதிரி ஆய்வுகளுக்கு மிகவும் பெறுமதி வாய்ந்தவை. ஏற்கனவே உள்ள உடல்நலம் குறித்த தரவுகளுடன், மேலதிகமான தரவுகள் மாதிரிகையை தரம் பிரிக்க உதவிக்கொள்கின்றன. இதன்மூலம் உங்கள் மாதிரிகள் யாருக்கு ஆய்வு நடவடிக்கைக்களுக்காக வழங்கப்படுகின்றதோ, அவர்களுக்கு பெருமளவில் உதவிக்கொள்ளும்.

### எப்போது இரத்தம் எடுப்பது இடம்பெறும்?

நீங்கள் வைத்தியசாலையில் தங்கியிருக்கும்போது அல்லது தங்கியிருக்காமல் சிகிச்சைபெறும்போது இரத்தம் எடுப்பது இடம்பெறும். நீங்கள் பிரத்தியேகமாக BioBank- ஆல் இரத்தம் எடுப்பதற்காக அழைக்கப்படமாட்டீர்கள்.

### Biobank என்றால் என்ன?

BioBank என்று அழைக்கப்படுவதில், கற்கைநெறிகளின்போது அல்லது பொதுவான ஆய்வுகளுக்காக மாதிரிகள் சேகரிக்கப்பட்டு வைக்கும் இடமாகும். ஒவ்வொரு பாதுகாத்து வைக்கப்படும் மாதிரிகளிலும் மாதிரிகள் குறித்த தரவுகள் மற்றும் அதை வழங்கியவர் பற்றிய விபரம் பதிவுசெய்யப்பட்டிருக்கும்.

### Liquid BioBank Bern எந்த நோக்கத்தை செயற்படுத்துகின்றது?

கடந்த வருடங்களில் மாதிரிகள் அதிகமாக ஒவ்வொரு தனித்தனியான கற்கைநெறி நோக்கங்களுக்காக சேகரிக்கப்பட்டது. இந்த பெறுமதியான மாதிரிப் பொருட்கள் இதன்மூலம் ஒரு குறிப்பிட்ட ஆய்வாளர் வட்டத்துக்கே பயன்பட்டது. Liquid BioBank Bern ஐ கட்டமைத்ததன் மூலம் சேர்க்கப்பட்ட மாதிரிகள் வித்தியாசமான ஆய்வுத் திட்டங்களுக்கு பாவிக்க வசதி ஏற்பட்டுள்ளது. இதன்மூலம் ஆய்விற்கான தனித்தனியான மாதிரிகளின் பாவனைகள் அதிகரித்துள்ளதுடன் மருத்துவ ஆய்வுகளின் தேவையும் குறைவடைந்துள்ளது.

## BioBank Bern குறித்த மேலதிக விபரங்களை நீங்கள் எங்கு காணலாம்?

Liquid BioBank Bern (LBB) என்பது Insel Gruppe ஐ சேர்ந்தது. LBB விசேடமாக உயிரியல் மருத்துவ ஆய்வுகளைத் தொடர்ந்து ஊக்குவிப்பதற்கும் சர்வதேசத்துடன் ஒப்பிடுகையில் மிகத் திறமையான தரத்தில் நோயாளர்களின் மாதிரிகளை வழங்கி உதவிசெய்வதற்குமாக ஏற்படுத்தப்பட்டது. இதன் நோக்கம் முன்னறிவிப்பு, முற்பாதுகாப்பு, கண்டறிதல் மற்றும் சிகிச்சைகளை மானிட மருத்துவத்தில் மேம்படுத்துவதாகும். இதைவிடவும் சேகரிக்கப்பட்ட தரவுகள் மற்றும் மாதிரிகளில் இருந்து அடிப்படை ரீதியான முறைகளில் நோய்கள் குறித்து விளங்கிக்கொள்வதற்கான ஆய்வுகளை மேற்கொள்வதற்குமாகும். நீங்கள் இன்னும் மேலாக Liquid BioBank Bern குறித்து அறிந்து கொள்ள விரும்பினால், எமது இணையத்தளத்தைப் பார்வையிடுங்கள் www.biobankbern.ch.

**உங்கள் சம்மதத்தின் மூலம், மருத்துவ ஆய்வுகள் மேலும் விருத்தியடைய எமக்கு உதவுங்கள்.**

**இதற்காக எமது இதயபூர்வமான நன்றிகளை உங்களுக்குத் தெரிவிக்கின்றோம்.**